மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் எதிர்க்கிறேன். கடந்த 8 ஆண்டுக் காலமாக சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்ட நிலையில் 9-வது ஆண்டும் வந்து கொண்டிருக்கின்றது. சென்னை மாநகராட்சியினை உருவாக்கிய மேட்லி துரை அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு குடிநீர் வடிகால் திட்டத்தினை ஏற்படுத்துகின்ற போது 50, 60 ஆண்டுகளுக்குப் பின்னால் சென்னை மாநகராட்சியின் ஜனத்தொகை 20 இலட்சம் இருக்கும் என்று கணக்கிட்டு அதற்கேற்றார்போல் திட்டத்தைத் தீட்டினார்கள். ஆனால் இன்றைய தினம் சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 40 இலட்சத்தினை எட்டி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தக் காலத்தில் 60 வட்டங்களாக இருந்தது, இன்றைக்கு சென்னை மாநகராட்சி 150 வட்டங்களைக் கொண்டதாக ஆக்கப்பட்டு மக்கள் தொகையும் அதிகமாகி இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் மக்களின் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மாநகராட்சியின் பணிகள் இன்று மிகவும் தேங்கி இருக்கின்றது என்பதை எல்லா கட்சியினரும் ஏற்றுக் கொள்வார்கள்.

இன்றைக்கு சாக்கடைகளைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே அதனுடைய மூடிகள் திறக்கப்பட்ட நிலையில் மக்கள் நடந்து சென்று கொண்டிருக்கும்போது அவர்கள் அந்தப்

1983 மார்ச் 4] [திரு. சு. பாலன்]

படுகுழியில் விழக்கூடிய நிலைமை இருக்கின்றது. பல இடங்களில் அதனால் உயிர் போய் இருக்கின்றது. ஆனால் சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரிகளை இன்னும் ஓர் ஆண்டுகாலத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவ்வாறு இருக்கின்ற தனி அதிகாரிகளின் பதவிக் காலமும் மிகக் குறுகியதாக இருக்கின்றது. எனவே திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்ற நேரங்களில் அவ்வப்போது தனி அதிகாரிகள் மாற்றப்படுவதன் காரணத்தால் அவை சரியாக நிறை வேற்றப்படாமல் போய்விடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே தேர்தல் நடத்துகின்ற வரையில் தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறோம் என்ற நிலையில் ஒரே அதிகாரியாக இருந்தால் சென்னை மாநகராட்சியின் திட்டங்களை நிறை வேற்றுவதற்கு வழிவகையாக இருக்கும். தேர்தலைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், தனி இடம் ஒதுக்குவதன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினை யினால் தேர்தல் தள்ளிப் போடப்படுகின்றது என்று சொல் கிறார்கள். அதிலே எவ்வளவு சீக்கிரமாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து மேல் கோர்ட்டுக்குச் சென்று வழக்கினை எவ்வளவு சீக்கிரமாக முடித்துக்கொண்டு தேர்தலை நடத்த முடியுமோ அந்த வகையில் நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தேர்தலில் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெறும் என்று சொன்னார்கள். ஆனால், சென்னையைப் பொறுத்தவரையில் யார் வெற்றி பெறுவார்கள் என்று மக்கள் தீர்ப்பளிக்கட்டும். அதை நாங்கள் ஏற்றுக்கொள் கிறோம். எனவே உடனடியாக சென்னை மாநகராட்சியின் தேர்தலை நடத்தி மக்களின் பிரதிநிதிகள் வருவதற்குறிய வழிவகையினைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மசோதா அறிமுகப்படுத்துவதை எதிர்க்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி யினுடைய (திருத்த) சட்டமுன்வடிவை, இந்திய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகிய நான், என் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன். நடைபெறுகின்ற தேர்தல்களில் எல்லாம், பாராளுமன்ற தேர்தலாக இருந்தாலும் சரி, சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, வெற்றி ஆளும் கட்சிக்குஎன்கிற நிலைமை இருக்கிறபோது, சென்னை மாநகராட்சியினுடைய தேர்தலை மட்டும், நீங்கள் நடத்தாமல் தொடர்ந்து நீட்டித்து வருவது, சென்னை நகரத்தினுடைய மக்கள் மத்தியில் உங்களுக்கு இருக்கும் ஐயப்பாட்டை எடுத்துக் காட்டுவதாகத் தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

[திரு. வே. இராஜசேகரன்] [1983 மார்ச் 4

அந்த அடிப்படையில் நீங்கள் தேர்தலை தள்ளி வைத்த போதெல்லாம் பல சந்தர்ப்பங்களில் பல காரணங்களைக் கூறி வந்தீர்கள். முதலிலே வாக்காளர்களுடைய வயது வரம்பை மாற்றுவதற்கு என்று—பொதுத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை 21 வயது என்று இருப்பதை 18 வயதாக ஆக்க வேண்டும் என்று—காரணம் காட்டி தேர்தலை தள்ளி வைத்தீர்கள். அதற்கு அடுத்தாற்போல மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறோம், அதன் அடிப்படையில்தான், தேர்தல் வாக்கு ஜாபிதா தயார் பண்ணப்போகிறோம் என்று சொல்லி தள்ளி வைத்தீர்கள். அதற்குப் பின்னாலே, தமிழகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும், குறிப்பாக பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் பிரதிநிதித்துவம் தரும் வகையில் சட்டத்திலே திருத்தப்போகிறோம் என்று சொல்லி, அதன்மீது தடை உத்தரவு கேட்டு உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள், உச்ச நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறபோது, தேர்தலை நடத்துவது இயலாது என்ற காரணத்தைக் காட்டி தள்ளி வைத்தீர்கள். அதிலே கூட காங்கிரஸ்காரர்களில் வழக்கறிஞர்களாக இருக்கிறவர்களும், இது சம்பந்தமாக வழக்கு மன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினீர்கள். இதில் இப்போது கூறப்பட்டிருக்கும் காரணம் என்னவென்றால் சர்வகட்சியினையும் அழைத்து, தலைவர்கள் மத்தியிலே இந்தப் பிரச்சினையை வைத்து, முடிவெடுத்து பிறகு தேர்தலை நடத்தப் போகிறோம் என்று கூறுகிறீர்கள்.

இவைகள் எல்லாம் ஏன் என்று தெரியவில்லை. அஸ்ஸாம் மாநிலத்திலே இருப்பது போல் தேர்தல் நடத்த வேண்டாம் என்று போராட்டம் நடத்தக்கூடிய சூழ்நிலை தமிழகத்திலே, அதிலும் குறிப்பாக சென்னையிலே இல்லையே. அப்படி இருந்தால் எல்லாக் கட்சிகளையும் அழைத்து, தலைவர்களோடு பேசி என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி முடிவு எடுக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட கலவர சூழ்நிலை சென்னையிலே இல்லை. சீக்கிரமாக தேர்தலை நடத்த வேண்டும், நடத்துங்கள் என்பதற்காக வேண்டுமானால் கலவரம் செய்யலாமே தவிர நடத்த வேண்டாம் என்று இங்கு யாரும் சொல்லவில்லை. ஆகையினால் இந்த மாநகராட்சி தேர்தலை நடத்துவதில் எந்தவித பயமும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகையினால் சர்வகட்சிகளைக் கூட்டாமலே இந்த சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்தலாம்.

சென்னை மாநகராட்சித் தேர்தல் சம்பந்தப்பட்ட மட்டில் எந்த வழக்கும் வழக்கு மன்றத்தில் இல்லை; உச்ச நீதி மன்றத்திலும் இல்லை. ஆகையினால் இந்த சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட தேர்தலை நடத்துவதில் எந்தவிதமான பயமும் தயக்கமும் அரசுக்கு ஏற்படவேண்டிய அவசியமும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1983 மார்ச் 4] [திரு. வே. இராஜசேகரன்]

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகள் என்னென்ன என்பதை நான் தனியாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எங்களைப் போலவே ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கும் ஆங்காங்கே மக்களுடைய குறைகளை தீர்ப்பதற்காக கொடுக்கப்பெற்ற மனுக்களை வைத்துக் கொண்டு அவைகளில் எப்படி பிரச்சினையை தீர்ப்பது என்று தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அவைகளில் சிலவற்றிற்குக் கூட தீர்வு காண முடியாமல், மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம் கவலைக்குள்ளாகியிருக்கிறோம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் எந்தவித வழக்கும் எந்த வழக்கு மன்றத்திலும் இல்லாத காரணத்தால், அதற்கு அவசியம் நீங்கள் தேர்தலை நடத்தியாகவேண்டும். சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டாமலேயே அதற்காக அறிவிப்பைச் செய்யுங்கள். அப்படி செய்தால் நீங்கள் விருந்தினருக்கு வழங்குகிறீர்களே, தஞ்சாவூர் தாம்பாளத் தட்டுக்கள், அவைகளில் ஒன்று அல்ல இரண்டை பரிசாகக் கொடுத்தாலும் போதாது என்று கூறி, இந்தச் சட்டமுன் வடிவை எதிர்த்து, அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவினை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆரம்பத்திலேயே நான் எதிர்க்கிறேன். காரணம் பல லட்சக்கணக்கான மக்கள் வசிக்கின்ற நகரத்தில், நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து போகின்ற நகரத்தில், அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரக்கூடிய நிலைமை, அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்யக்கூடிய நிலைமை தற்போது இருக்கின்ற தனி அதிகாரிகளுக்கு இல்லை. அவர்களால் அது முடியவில்லை. இதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களே, சென்னை நகரத்தின் பல பகுதிகளுக்கும் செல்கிற போது, நிர்வாகம் எப்படி சீர்கெட்டு இருக்கிறது என்பதை பார்த்திருக்கிறார்கள். அவர்களே இதை நன்கு அறிவார்கள். ஆகவே உடனடியாக தேர்தலை நடத்துவதே சரியாக இருக்கும்.

ஏற்கனவே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல இதைக் குறித்து எந்த வழக்கும் உச்ச நீதிமன்றத்திலே இல்லை. ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் எந்தவித தடையும் இல்லை. சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் போது கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது குறித்து சர்வ கட்சிகள் கூட்டம் கூட்டி, தலைவர்களை அழைத்துப் பேசி முடிவு எடுக்க இருக்கிறோம் என்று. ஒரு ஆண்டுக்காலம் ஆகியும், இதற்கென சர்வகட்சிக் கூட்டம் கூட்டப் பெறவில்லை இன்று வரையில். 7 ஆம் தேதியன்று விவாதம் இருக்கிறது. அதற்குப் பிறகு பேசி இதில் முடிவெடுக்கலாம் என்று இப்போது சொல்

கிறார்கள். இந்த 1 ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே இதைச் செய்திருக்க முடியும், போதிய கவனம் மட்டும் செலுத்தியிருந்தால் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

விரைவில் தேர்தலை நடத்த இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனி அதிகாரிகளின் பதவிக்காலம் நீட்டிப்பு என்ற இந்த திட்டத்தை வாபஸ் பெற்று, வருகிற காலத்தில் உடனடியாக தேர்தலை நடத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்காக இங்கே கொண்டு வந்துள்ள திருத்த சட்ட முன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறோம். ஏன் என்றால் 40 லட்சம் மக்கள் வாழ்கின்ற இந்த மாநகராட்சியினுடைய குரலாக உள்ள மாநகராட்சியின் மன்றத்தில் நூற்றுக் கணக்கான அங்கத்தினர்கள் இருந்து மக்களுடைய பிரச்சனைகளை எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. தண்ணீர் இல்லை, ஒளி விளக்கு இல்லை, சாலைகள் எல்லாம் ஒரே குப்பையும் கூளமுமாக இருக்கிறது, இதனால் காலரா வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று எடுத்துச்சொல்வதற்கு உண்டான வாய்ப்பை நீங்கள் தடுத்து இருக்கிறீர்கள். மாநகராட்சிக்கு தேர்தல் நடத்துவதற்கு யாரும் தடை வாங்கவில்லை. ஹைக்கோர்ட்டில் வழக்கும் இல்லை. ஏன் உங்களுக்கு இந்த இரட்டை நிலை, தேர்தல் நடத்துவதில். உங்கள் சின்னம் தான் இரட்டை இலை. தேர்தலில் ஏன் இரட்டை நிலை இருக்கிறது. மாநகராட்சியின் தனி அதிகாரிகளானாலும் சரி, ஊராட்சியின் தனி அதிகாரிகளானாலும் சரி எல்லாம்—சில அதிகாரிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள்—பெரும்பாலும் சர்வாதிகாரிகளாக இருக்கிறார்கள். தனி அதிகாரி என்று போடுவதை சர்வாதிகாரி என்று போடுங்கள். மாநகராட்சிக்குப் பதிலாக மாநரகாட்சி என்று போடுங்கள். அப்படி மாற்றினால் நன்றாக இருக்கும். தேர்தலைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறீர்கள். உங்கள் கட்சியில்தான் தேர்தல் இல்லை. மாநகராட்சிக்கு தேர்தலை நடத்த நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வைப் பொறுத்தவரைக்கும் ஏற்கனவே தேர்தல் நடந்திருக்கிறது. ஆகவே தேர்தல் இல்லை என்று சொல்வது உங்கள் கட்சியில் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வில் தேர்தல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பில் இண்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் சுருக்கமாகப் பேச வேண்டும். பொது விவாதம் போல பேச வேண்டியதில்லை.

1983 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 124வது-விதி ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் எதிர்க்கப்பெற்றால் பேரவைத் தலைவர் தாம் தேவை என்று கருதினால் திருத்தத்தை முன்மொழியும் உறுப்பினரையும், எதிர்க்கும் உறுப்பினரையும் அவர்கள் கருத்தை சுருக்கமாகக் கூற அனுமதித்த பிறகு மேற்கொண்டு எவ்வித விவாதமும் இன்றி பேரவையின் முடிவுக்கு விடவேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, பில் அறிமுகத்தை எதிர்க்கிறேன் அல்லது ஆதரிக்கிறேன், அதற்கான காரணம் இவை அதைத்தான் சொல்லி முடிக்கவேண்டும். விரிவாகச் சொல்வதற்கு அலுவல் ஆய்வு குழுவின் முடிவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே அறிவிக்க இருக்கிறார்கள். ஆக நாளை நிதி நிலை அறிக்கை வைத்த பிறகு 7-ஆம் தேதி அன்று இவைகள் எல்லாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. 8-ஆம் தேதியிலிருந்து பொது விவாதம் துவங்கயிருக்கிறது. ஆக 7-ஆம் தேதியே இதற்கு விவாதம் நடத்துவதற்கு முழு வாய்ப்பும் தரப்பட்டிருக்கிறது மாநகராட்சிக்கு. மாண்புமிகு உறுப்பினர்கள் அப்போது சொல்லலாம். இப்போது இதை எதிர்க்கிறேன், வேண்டாம் என்று சொல்லிவிட்டால் போதும். அதற்குள்ள தன்மையை நீங்கள் உணரவேண்டும். ஆக இந்த அதிகாரிகள் நீடிக்கப்படமாட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இருக்கமாட்டார்கள் என்றால் நிலையாக அங்கே இருக்கிற ஹெட் கிளார்க் மற்றவர்கள் தான் இந்த நிறுவனங்களை எல்லாம் நடத்திக்கொண்டு வரவேண்டும். ஆக இந்த யோசனைகளை எல்லாம் சொல்லலாம். எப்போது என்றால் இந்த திருத்தத்தை ஆதரித்துவிட்டு பிறகு யோசனைகளை சொல்லலாம். இதை எல்லாம் சேர்த்து 7-ஆம் தேதி நடைபெறுகிற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்துக் கொள்ளலாம். அவையினுடைய நேரத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். ஆக கருத்துக்களை மட்டும் சிறந்த முறையில் சொல்லி முடிக்கவேண்டும். விவாதம் வேண்டாம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். எங்கள் கட்சியில் ஆண்டுதோறும் தேர்தல் நடக்கிறது. அதேபோல் நீங்களும் தேர்தலை நடத்துங்கள் என்று கூறி இந்த பில்லை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரியின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு இந்தச் சட்ட மசோதாகொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பாக மாநகராட்சியின் தேர்தலையும் எவ்வளவு சீக்கிரமாக நடத்த வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைபெறுவதற்குரிய

சூழ்நிலையை இந்த அரசு தக்க நடவடிக்கையின் மூலம் எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே ஏற்கனவே நகராட்சிகளுக்கு என்ன பதிலை நான் சொன்னேனோ அதேபோன்ற நிலைதான் மாநகராட்சிகளுக்கும். ஆகவே பஞ்சாயத்து தேர்தல், அதற்கு பிறகு நகராட்சிகள் தேர்தல், அடுத்து மாநகராட்சிகளுக்கு தேர்தல். இப்படித்தான் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஆனாலும் கூட இன்று நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் தேர்தலை சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்னால் இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருதேதியை முடிவுசெய்து அந்த தேதியில் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால் உண்மையில் இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் அதை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம். குறிப்பாக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் இதை அசாமுக்கு ஒப்பிட்டு அசாமில் தான் தேர்தல் வேண்டாம் என்று சொன்னார்கள். ஆகவே அசாம் போன்ற நிலை இங்கே தமிழகத்துக்கு இல்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒரு உறுதிமொழியை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அசாம் போன்ற நிலை கண்டிப்பாக, உறுதியாக இங்கே ஏற்படாது என்ற உறுதிப்பாட்டினை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல * * *

திரு. என். எஸ். வி. சித்தன்: சார்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ராஜசேகரன், தஞ்சாவூர் தட்டு இரண்டு தாம்பாளத் தட்டு கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சி பொறுப்பிலே இருந்த நேரத்திலே ஹைதராபாத்திலே தேர்தல் நடைபெறவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பேசலாம், அதை நாம் தடை செய்வது என்றால் இங்கே நாம் ஒன்றையுமே பேச முடியாது. ஏதாவது ஒரு சார்ஜை, அலிகேஷனைத்தான் சொல்லக் கூடாது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1983 மார்ச் 4]

திரு. வே. இராஜசேகரன் : ஹைதராபாத்திலே ....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அங்கே இப்போது என்.டி.ஆர். வந்துவிட்டார். முதலில் நீங்கள் இருந்தபோது நடத்தவில்லை. இந்தத் தேர்தலைக் கண்டு நாங்கள் பயப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். 'பயம்' என்ற வார்த்தை எங்களுடைய வரலாற்றிலேயே இல்லாத ஒன்று. எந்தத் தேர்தலிலும் வெற்றிவாகை சூடக்கூடிய ஒரு கட்சி தமிழகத்திலே இருக்கிறது என்று சொன்னால் அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தேர்தலை எப்போதும் நடத்துவதற்கும் தயாராக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. திரு. அம்பிகாபதி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இரட்டை இலை சின்னத்தை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஏன் இரட்டை நிலை என்று கேட்டார்கள். உண்மையிலேயே இரட்டை நிலை யாருக்கு என்று சொன்னால் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப்பொறுத்தவரையில் இரட்டை நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் மேற்கு வங்கத்திலே ஒரு நிலை, தமிழகத்திலே இன்னொரு நிலை என்ற நிலை அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தயவுசெய்து உங்களுடைய நிலையை மாற்றிக்கொண்டு எங்களுடைய நிலையைப்பற்றிப் பேசுவது தான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்லும்போது தேர்தல் சம்பந்தமாக ஏன் இரட்டை நிலை எடுக்கிறீர்கள் என்று உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தமாக பேசியபோது அமைச்சர் சொன்ன பதிலில் கம்யூனிஸ்ட் கட்சியிலே மேற்கு வங்கத்திலே ஒரு நிலை இங்கே ஒரு நிலை எடுத்ததாகச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில் இரண்டு நிலைகளை எடுத்ததாக சரித்திரமே கிடையாது. ஒரே நிலைதான். அங்கே உள்ளவர்களைக் கேட்டால் அதைத்தான் சொல்வார்கள். இங்கே உள்ளவர்களைக் கேட்டாலும் அதைத்தான் சொல்வார்கள். இரட்டை நிலை எது என்பதை அவர்கள் விளக்கிச் சொன்னால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கம்யூனிஸ்ட் இயக்கம் ஒரே கொள்கையின் அடிப்படையில் இருக்கிறது என்று சொன்னால் ஏன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் இந்திய தேசிய கம்யூனிஸ்ட் கட்சி என்றும் தனியாக வைத்துக்கொள்ள வேண்டும் ? இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இங்கே வேலை இல்லை. ஏன் என்று சொன்னால் இருவரும் ஒரே கொள்கையை ஒரே கருத்தை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று சொன்னால் ஏன் இரட்டை நிலை ?

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, அனாவசியமான சர்ச்சையிலே அமைச்சர் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் இயக்கத்திலே என்ன கொள்கையைக் கையாளவேண்டுமென்று பகிரங்கமாகவே விவாதங்கள் வந்து கொள்கை வித்தியாசங்கள் ஏற்பட்டது. அப்படிச் சொன்னால், திராவிட இயக்கத்திலே எத்தனையோ இயக்கங்கள் துண்டு துண்டாக பல இருக்கின்றன. அதற்கு என்ன விளக்கம் அவர்கள் சொல்வார்கள்? ஆகவே இந்தப் பிரச்சினைக்குப் போகவேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரையில் அண்ணாவினுடைய கொள்கைகளை, லட்சியங்களை, கோட்பாடுகளை நிறைவேற்றுகிற ஒரே கழகமாக, திராவிட பாரம்பர்யத்தினுடைய பரிணாம வளர்ச்சியாக இருப்பது தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்ற கழகம் ஒரே கொள்கை என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சிகளாவது இன்றைக்கு நாட்டினுடைய நிலைமைகளை புரிந்து, கூட்டு நடவடிக்கை எடுத்து, மேற்கு வங்காளம், கேரளம், திரிபுரா ஆகிய இடங்களில் ஒரே நிலையை எடுத்து, பொதுநிலையை ஏற்று போராடுகிறது. ஆனால் உங்களுடைய இயக்கம் அப்படியில்லையே! இன்றைக்கு கூட ஒன்றையொன்று எதிர்த்து, அடிப்படையிலே வித்தியாசம் இல்லாவிட்டாலும், தனிப்பட்ட வித்தியாசத்தின் காரணமாக, போராடிக்கொண்டிருக்கிறீர்களே?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட வித்தியாசம் இல்லை. இதிலே உண்மையான திராவிட கழகம் என்பது அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்தான். ஆகவே இதைத் தான் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (கூச்சல், குழப்பம்).

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே' மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் திராவிடர் இயக்கத்தில் அந்த நிலை என்று குறிப்பிடும் போது, அண்ணாவின் கொள்கைகளை உள்ளபடியே நிறைவேற்றுகிற இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தான் என்று குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில்,—அதனுடைய தன்னம்பிக்கை, மற்ற எல்லா திராவிட இயக்க கட்சிகளை விட—திராவிட முன்னேற்றக் கழகம் தான் அண்ணாவினுடைய கொள்கைகளை தீவிரமாக உண்மையாக நிறைவேற்றுகிற இயக்கம் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1983 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகத் தான் சொன்னேன். ஆய்விற்கு எடுத்துக் கொள்கிற நேரத்திலே இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று சொன்னேன். ஆனால் அறிமுக நிலையிலேயே ஆரம்பித்திருக்கிறார்கள். எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் மாநகராட்சியிலே இருக்கக் கூடிய நிலைமைகளை எல்லாம் எடுத்துச்சொன்னார்கள். மன்னார்க்குடிக்கும் மாநகராட்சிக்கும் எப்படி சம்பந்தம் வந்தது என்று தெரியவில்லை. (சிரிப்பு) சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லலாம், நான் இல்லை என்று சொல்ல வில்லை. இங்கே ராஜசேகரன் அவர்களும், பாலன் அவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்றால் அவர்கள் மாநகராட்சிக்கு உள்ளிட்ட தொகுதிகளிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) உங்களுடைய ஊரும் மன்னார்குடியா? அப்படி யென்றால் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. ஆகவே இந்த சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். அறிமுகம் செய் வதற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி—'' 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனு மதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(எ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS